தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 15, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 ஜூன் 29, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.”

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

புதிய மடை

***51738—திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, 58 கிராம கால்வாய் திட்டத்தின்கீழ் ஆணையூர் கண்மாய்க்குப் புதிய மடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாய் திட்டத்தின் வலது பிரிவு கால்வாய்மூலம் ஆணையூர் கண்மாய்க்குப் புதிய மடை கட்டுவதற்கு ரூ.3.12 கோடிக்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் அமைந்துள்ள 58 கிராம கால்வாய் உசிலம்பட்டி பகுதிக்கு ஒரு கனவுத் திட்டம். ஏனென்று சொன்னால், இத்திட்டத்தின்மூலம் வைகை அணையிலிருந்து நேரடியாக 58 கிராம கால்வாய்க்கு மட்டும் மடை அமைத்து, தண்ணீர் தரப்பட்டு வருகிறது. அதனால், இது மிகப் பெரிய வரப்பிரசாதமான திட்டமாகும். ஆனால், உசிலம்பட்டி ஆணையூர் கண்மாயைப் பொறுத்தவரையில், உசிலம்பட்டி கண்மாய்க்குத் தண்ணீர் வரபெற்று, அது முழுக் கொள்ளளவை எட்டியவுடன், மறு கால்வாய் வழியாகத்தான் ஆணையூர் கண்மாய்க்குத் தண்ணீர் செல்கிறது. எனவே, ஆணையூர் கண்மாய்க்கு 58 கிராம கால்வாயிலிருந்து நேரடியாக மடை அமைத்து, தண்ணீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமாதிரிதான் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது;* tender *விடப்படும் என்று தெரிவித்திருக்கிறோம். உங்களுக்கு அங்கு என்ன வேண்டுமென்று சொல்கிறீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. அய்யப்பன்,* short*–ஆக, தெளிவாகச் சொல்லுங்கள்.*

2024 ஜூன் 29]

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்; அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்; நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றி. குறிப்பாக உத்தப்பநாயக்கனூரிலிருந்து 58 கால்வாயாக பிரிகின்றது. 58 கிராம கால்வாயிலுள்ள அனைத்து கண்மாய்களிலுமே, நல்லச்சன்பட்டியிலிருந்து கண்மாய் பெருகி, அதன் வழியாக கல்லூத்து கண்மாய் பெருகி, பெருமாள்பட்டி, எரவார்பட்டி, பாணாமூப்பன்பட்டி, ஐயம்பட்டி என இத்தனை கண்மாய்களுக்கு மறுகால்போய்தான் அங்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஒரு கண்மாய்க்கு மூன்று நாட்கள்தான் தண்ணீர் கொடுக்கின்றார்கள். இதனால் முழு கொள்ளளவு பெறுவதற்கு சாத்தியம் இல்லை. அதனால், 58 கிராம கால்வாய் 360 கன அடி தண்ணீர் கொள்ளளவை எட்டினால்தான் இந்தத் திட்டமெல்லாம் முழுமைபெறும். இப்பொழுது, 150 கன அடி தண்ணீர்தான் எடுக்கப்படுகிறது. 150 கன அடி தண்ணீர் எடுக்கப்படும்போது, கடைமடைக்கு வரும்போது 100 கன அடி தண்ணீர்தான் வருகிறது. கசிவு ஏற்பட்டு அந்தத் தண்ணீரும் வெளியேறிவிடுகிறது. எனவே, முழு கொள்ளளவான 360 கன அடி தண்ணீரை எடுப்பதற்கும், அந்த விவசாயிகளின் கனவை நனவாக்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டம் வகுத்து, சிமெண்ட் கால்வாய் அமைத்துக் கொடுத்தால் எங்கள் பகுதி விவசாய மக்களின் கனவு நிறைவேறும், இந்த அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மக்கள் நன்றி சொல்வார்கள், நானும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சற்றொப்ப 30 வருடங்களுக்கு முன்னால் தலைவர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட ஒரு திட்டம். உசிலம்பட்டி வட்டாரத்தில் சுமார் 58 கண்மாய்கள் வறட்சியாக

[*2024 ஜூன் 29*

இருக்கின்றன. அதன் ஊடே வைகை ஓடுகிறது. அங்கே 72 அடி கொள்ளளவு வைத்திருக்கிறோம். 68 அடிக்கு தண்ணீர் வருமானால், அதற்குப் பிறகுதான் அந்தக் கிராமங்களுக்கு 58 கிராம கால்வாய் திட்டத்தில் தண்ணீர் வழங்க முடியும். இந்தத் திட்டத்தை 1996-ல் நாங்கள் துவங்கிவிட்டு வந்தோம். அதற்குப் பிறகு, அது அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

முற்பகல் 9-35

கருமேனியாறு திட்டத்திற்கு என்ன கதியோ, அதே கதிதான் இதற்கும் ஏற்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள் மிகவும் நேசித்தார்கள். ஏனென்றால், வறட்சியான ஒரு பகுதிக்குத் தண்ணீர் கொண்டு வருகின்ற திட்டம் இது. ஆனால் அது அப்படியே நின்று போய்விட்டது. மறுபடியும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், 2022 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம். மறுபடியும் 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் பணம் ஒதுக்கியிருக்கிறோம்; வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் பிரச்சினை என்னவென்று கேட்டால், ஓர் இடத்தில் கால்வாய் வெட்டிக்கொண்டு வந்தோம்; சில இடங்களிலே வெட்ட முடியாத நிலை இருந்தது. உயரமான கால்வாய், பாலம்மூலம் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. கன்னியாகுமரி வில்லுக்குறியில் இருப்பதைப்போல, வட ஆற்காட்டில் மோர்தானா அணை இருப்பதைப்போல பாலங்களில் அமைகிற திட்டம். அது ஒரு காட்டு வழி. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இரவு 8 மணிக்கு அங்கு சென்று பார்த்தேன். பாம்புகள் சுற்றித் திரிந்த ஓர் ஊர் அது. அந்தப் பாலங்கள் எல்லாம் அதற்குப் பிறகுதான் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், தண்ணீரை எடுத்தோம் என்றால், பின்னர் பல பிரச்சினைகள் வரக்கூடும். உங்களுக்கும் தண்ணீர் வர வேண்டும்; அதேநேரத்தில் கீழே இராமநாதபுரம் ஏரியும் நிரம்ப வேண்டும். அதுபோன்று கணக்கிட்டு திட்டம் வகுத்து வைத்திருக்கிறோம். கீழ்ப் பகுதியிலிருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படாமல்தான் தண்ணீர் திறக்க முடியும்.

2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***84563—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, 141-வது வார்டு, முத்துரங்கன் சாலையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

சென்னை பெருநகரில், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு 141-லுள்ள 57 தெருக்களில் 74 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். முத்துரங்கன் சாலைக்கு தென் சென்னை நீரேற்று நிலையத்திலிருந்து தற்போது காலை 3–00 மணி முதல் காலை 6–00 மணி வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் குடிநீர் கட்டமைப்புகளை மேம்படுத்தி 24X7 முறையில் குடிநீர் நேரடியாக வீட்டு இணைப்புகளுக்கு வழங்க விரிவான திட்ட அறிக்கை ஒடிசா நீர் நிறுவனம் மூலமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணி முடியும்போது முத்துரங்கன் சாலை பகுதியில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்படும். மேற்கண்ட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது, அனைத்துத் தெருக்களிலும் சம அளவு குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியமில்லையென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவைப்படும் என்று சொன்னால், அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.